<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் நலம் – கல்வி 2007–2008–ம் ஆண்டில் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் –11 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் /பழங்குடியினர் /மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவியர் மற்றும் மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கு 2007–2008–ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை செலவு செய்ய அனுமதியளித்து அரசு ஆணையிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந 7) நலத்துறை

ஆரசாணை (நிலை) எண்.101 நாள் : 20.08.2007

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.45, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 27.07.2001.
2. அரசாணை (நிலை) எண்.123, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 4.08.2005.
3. அரசாணை (நிலை) எண்.124, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 20.09.2006.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.K1/14318/2007. நாள் 17.05.2007.

--------

<u>ஆணை</u>:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2001–2002–ம் ஆண்டில் 11 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவியர் மற்றும் மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2005–2006–ம் ஆண்டில் 11 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் /மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டம், 2006–2007–ம் ஆண்டு முதல் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு இலவச சைக்கிள் வழங்கம் திட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

2. மேலே 4–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், 2007–2008–ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகளில் 11 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவியர் மற்றும் மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கு ரூ.13.51,55,000/– மற்றும் 12,64,52,000/– ஆக மொத்தம் ரூ.26,16,07,000/– (ரூபாய் இருபத்து ஆறு கோடியே பதினாறு இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் சைக்கிள் வாங்கி வழங்க அரசின் அனுமதியை ஆதிதிராவிடர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

3. இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் கீழ்க்கண்ட மாணவ/மாணவியர்கள் இலவச சைக்கிள் பெற தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

1. உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் படிக்கும் மாண/மாணவியர்கள் மற்றும் பள்ளி வளாகத்தில் உள்ள விடுதிகளில் தங்கிப் படிப்பவர்கள்.
2. ஏற்கெனவே இலவச சைக்கிள் பெற்றவர்கள்.

இலவச சைக்கிள் பெற்ற மாணவிகள் மற்றும் மாணவர்கள் சைக்கிளை தவறாக பயன்படுத்தக் கூடாது. சைக்கிள்களில், எண்ணிடப்பட வேண்டும் (Numbered) மாணவர்கள் சைக்கிள்களை விற்றாலோ, தவறாக பயன்படுத்தினாலோ அவர்களிடமிருந்த சைக்கிளின் மதிப்பு வசூலிக்கப்படும். தமிழக அரசால் வழங்கப்படும் சைக்கிள்களில் கோபுரம் பதித்த அரசு முத்திரை பொருத்தப்பட வேண்டும்.

4. மாவட்ட ஆட்சியர்கள், இலவச சைக்கிள் வழங்குவதற்கு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர்/துணை மாவட்டாட்சியர்/மாவட்ட கல்வி அலுவலர்/முதன்மை கல்வி அலுவலர் ஆகியோர் நிலையில் உள்ள அலுவலரை, ஒருங்கிணைப்பு அலுவலராக ஒவ்வொரு வட்டத்திலும் நியமித்தல் வேண்டும். அவர்கள் முறையாக சைக்கிள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பதிவேடுகளை தயார் செய்து, சைக்கிள் விநியோகம் செய்யப்பட்ட பின்னர் மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், இலவச சைக்கிள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, அதற்கான ரசீது, வண்டிகளின் தரம், சைக்கிள்கள் உரியவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டனவா போன்றவைகளை உறுதி செய்து கொண்டு அதற்குரிய தொகையை வழங்குதல் வேண்டும். மாவட்ட ஆட்சியர்களுக்கு தேவையான தொகை ஆதிதிராவிடர் நல இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்படும்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, 2007–2008–ம் ஆண்டிற்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.13,51,55,000/– மற்றும் ரூ.12,64,52,000/– ஆக மொத்தம் ரூ.26,16,07,000/ – (ரூபாய் இருபத்தி ஆறு கோடியே பதினாறு இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) சைக்கிள் வாங்கி வழங்க அரசு ஆணையிடுகிறது. 2006–2007–ம் ஆண்டில் இலவச சைக்கிள் வழங்கப்படாதவர்களுக்கும் தொடர்ந்து 2007–2008–ம் ஆண்டில் பயிலும் மாணவியர்/மாணவர்களுக்கும் மேலே பத்தி 1–ல் கண்டுள்ளவாறு சைக்கிள் வழங்க அரசு ஆணையிடுகிறது. மேலும் கொள்முதல் குழு நிர்ணயிக்கும் விலையின் அடிப்படையில் இந்த சைக்கிள்களை வாங்கி வழங்கும்படியும் அறிவுறுத்தப்படுகின்றது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>மாணவியர்கள் சைக்கிள்</u>:-

“2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II – மாநிலத் திட்டம் – KJ – அரசினர்/அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவியர் அனைவருக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்குதல் – 09 – உதவி

மானியங்கள் – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்" (த.தொ.கு.எண்.2225 – 01 – 277 – KJ – 0903)

<u>மாணவர்கள் சைக்கிள்</u>:-

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II – மாநிலத் திட்டம் – KO – அரசு/அரசு மானியம் பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் – உதவி மானியங்கள் – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் " (த.தொ.கு.எண்.2225 – 01 – 277 – KO – 0930)

7. மாவட்ட வாரியாக சைக்கிள்கள் வாங்கி வழங்கப்பட்டது குறித்த விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.5195/ADTW/2007, நாள் 10.08.2007–ன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.முத்துக்குமாரசாமி
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை.
வேளாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/1.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள்,
சென்னை–9.
நிதித்(ஆதிந) துறை, சென்னை–9
பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர் (மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–9.
உதிரி/இருப்புக்கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஒப்பம்/–
(மா.இளங்கோ)
பிரிவு அலுவலர்